ஜூலை 2024

அன்புள்ள சகோதரி,

என் அன்பான கணவரும் , நமது அன்பான மெட்ரோபாலிட்டனாவர் கர்த்தருக்குள் நித்திரை அடைந்து இப்போது இரண்டு மாதங்கள் ஆகின்றன. அவருடைய பரிசுத்த நினைவு கூறுதலில் ஒரு குடும்பமாக, நமது பேராயர்களுக்கும், நமது குருவானவர்களுக்கும், நமது முழு விசுவாச மக்களுக்கும் இது மிகவும் எதிர்பாராத ஒன்று.

அவர் நம்மை கடந்து சென்றதற்காக நாம் ஒன்றாக துக்கம் அனுசரித்தோம்; அவரது அடக்கத்தை பார்த்து கண்ணீருடன் கலந்துகொண்டோம்; அவருடைய வாழ்க்கையில், பல ஆண்டுகள் உண்மையுள்ள சேவையையும், கிறிஸ்துவை அறியச் செய்யவும், ஏழைகளுக்கு உதவவும், திருச்சபையை வழிநடத்தவும் அவர் செய்த அனைத்தையும் நினைவுகூர்ந்தோம்.

நேரடி ஒளிபரப்பில் சிலர் ஆராதனைகளில் நீங்கள் கலந்துகொண்டீர்கள் அல்லது பார்த்தீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். மெட்ரோபாலிட்டனுக்கு பிரியாவிடை கொடுக்க பெரியவர்களும், சிறியவர்களுமாக இத்தனை பேர் வந்தார்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவருடைய வாழ்க்கை சுவிசேஷத்தாலும், கிறிஸ்துவின் அன்பினாலும் வந்தவர்களைத் தொட்டது. ஆராதனைகளின் போது எங்கள் குடும்பத்தையும் அந்த பெரிய திரையில் பார்த்தீர்கள் என்று நான் நினைக்கிறேன். இது எளிதானது அல்ல, ஆனால் அத்தகைய துயரமான நேரத்தில் கூட விசுவாசத்தில் உறுதியாக இருக்க தேவன் நமக்கு கிருபை கொடுத்தார். எங்களை வழிநடத்த உதவிய உங்கள் ஜெபங்களுக்கு மிக்க நன்றி.

நான் , சாரா (எங்களது மகள்) மற்றும் அவரது குடும்பத்தினருடன் 40 நாட்கள் துக்கம் முடிந்து, நமது புதிய மெட்ரோபாலிட்டனுடன் தங்கியிருந்தேன் ...
நான் வீட்டிற்கு வந்ததிலிருந்து, நமது சபைகளில் நம்மை நேசித்து நமக்காக ஜெபிக்கும் அனைத்து சகோதரிகளையும் பற்றி நான் நினைத்துக்கொண்டிருந்தேன். என் கணவரை இழந்த பிறகு நான் சரியாகிவிடுவேனா என்று நீங்கள் யோசித்துக் கொண்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்.

அன்புள்ள சகோதரியே, நான் எப்படி இருக்கிறேன் என்பதையும், இந்த கடினமான நேரத்திற்காக தேவன் எனக்கு அளித்த கிருபையைப்பற்றியும் உங்களுக்குத் தெரியப்படுத்தவே இந்த கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.
நாம் ஒரு வீழ்ச்சியடைந்த உலகில் வாழ்வதால், நாம் அனைவரும் நம் வாழ்நாளில் போராட்டங்களையும் ஒருவித இழப்பையும் அனுபவிப்போம். இன்று நான் உனக்கு எழுதுவது என்றாவது ஒரு நாள் உனக்கு உதவியாக இருக்கலாம்.

எங்கள் பேரக்குழந்தைகள் உட்பட எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் மெட்ரோபொலிட்டனை மிகவும் இழந்து இருக்கிறார்கள். அவர் எப்போதும் பயணம் செய்வது எங்களுக்கு பழக்கமானது, ஆனால் அவர் எப்போதும் வீட்டிற்கு வருவார். இனி அவரை மறுபடியும் பார்க்க நாம் சொர்க்கத்தை அடையும் வரை காத்திருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை, மெட்ரோபொலிட்டனும் நானும் திருமணம் செய்து கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் (12 நாட்கள் குறைவாக ) நிறைவாகியது, எங்கள் வாழ்க்கையின் இந்த இறுதி பகுதியை நாங்கள் ஒன்றாக செலவிட முடியும் என்று நான்

நம்பினேன், அதே நேரத்தில் கர்த்தருக்கு சேவை செய்தோம். எல்லாமே வித்தியாசமாக மாறின. திடீர் விபத்தும், மரணமும் இந்த பூமியில் ஒருவருக்கொருவர் கடைசியாக உரையாடவோ அல்லது ஒருவருக்கொருவர் விடைபெறவோ கூட அனுமதிக்கவில்லை.

எனக்கு புரியாத பல விஷயங்கள் உள்ளன, ஒரு பதிலைப் பெற நித்தியம் வரை காத்திருக்க வேண்டிய கேள்விகள் என்னிடம் உள்ளன. அதுவரை,நான் நமது தெய்வீக வல்லமையுள்ள தேவனை நம்ப முடிவு செய்துள்ளேன், ஏனென்றால் அவருடைய வார்த்தை அவர் நல்லவர், அவர் அன்பானவர், அவர் ஒரு தவறு கூட செய்யவில்லை என்று கூறுகிறது.

என் கண்ணீரையும், நான் உணரும் இழப்பையும், நான் அனுபவிக்கும் துக்கத்தையும் பற்றி இயேசு கவலைப்படுகிறாரா? அவர் இந்த பூமியில் வாழ்ந்ததால், நான் கடந்து செல்லும் அனைத்தையும் அவர் ருசித்தார் என்று தேவனின் வார்த்தை எனக்கு உறுதியளிக்கிறது. மேலும், சிலுவையில் அவர் என் துயரம், வலி மற்றும் துக்கங்கள் அனைத்தையும் சுமந்தார். நான் அழும்போது, தனிமையை உணரும்போதும், என் எதிர்காலத்தைப் பற்றி ஆச்சரியப்படும்போதும் அவர் என்னை புரிந்துகொள்கிற நபராக இருக்கிறார்.

இப்போது நான் உணரும் சோகத்திலிருந்து எப்போது என் இதயம் மீளும்? நம் ஆத்துமா (அதன் அனைத்து உணர்ச்சிகளுடனும்) மீட்கப்பட்டு இழப்புக்குப் பிறகு குணமடைவதை அனுபவிக்க நமக்கு நேரம் தேவைப்படும் வகையில் தேவன் நம்மைப் படைத்திருக்கிறார். பல சோதனைகளை சந்தித்த தாவீது, சங்கீதம் 23:3ல் தனது சொந்த அனுபவத்திலிருந்து சாட்சியளிக்கிறார், "அவர் என் ஆத்துமாவைத் தேற்றுகிறார்". இந்த நாட்களில் நான் சங்கீதம் 23 மற்றும் இரண்டு சங்கீதங்களின் மூலம் ஒரு நாளைக்கு பல முறை ஜெபிக்கிறேன், எனக்கும் அவரில் விசுவாசம் வைக்கும் அனைவருக்கும் மறுசீரமைப்பின் இந்த வாக்குறுதியை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவர் என்று என் முழு இருதயத்தோடு நம்புகிறேன்.

இப்போதைக்கு என்னால் சமாளிக்க முடியும் அவ்வளவுதான், இல்லையெனில் நான் அதிகமாக உணர்கிறேன். ஒவ்வொரு நாளும் என்னோடு நடந்து எனக்கு தேவையான பெலனை கொடுக்க அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அன்றன்றைய தினத்திற்காக நான் செய்ய வேண்டிய ஊழியங்கள் முன்பு இருந்ததை விட குறுகியதாக உள்ளது, சில நேரங்களில் நான் நிறுத்தி ஓய்வெடுக்க வேண்டும் அல்லது என் இனிமையான பேரக்குழந்தைகளுடன் நேரத்தை செலவிட வேண்டும் என்கின்ற என்னம் எனக்கு உண்டு.

எனக்கு மிகவும் உதவியது என்னவென்றால், தேவனுடைய வார்த்தையில் என் முழு நம்பிக்கையை வைத்து அதைப் பின்பற்றுவது என் சொந்த வாழ்க்கையின் சவாலான காலங்களிலும், ஊழியத்தில் நாங்கள் சந்தித்த பல போராட்டங்களிலும் இதை நான் கற்றுக்கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் செய்தேன்.

என் அன்பு சகோதரி, உங்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய சோதனையை எதிர்ப்படுவதற்கு முன்பு இதைக் கற்றுக்கொள்ள நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நான் நம்பும் வேதவாக்கியங்களில் ஒன்று இயேசுவின் வாக்குத்தத்தம்: "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" (எபிரெயர் 13:5). எதிர்காலத்தில் எனக்கு என்ன நடக்குமோ என்ற பயத்தை இது போக்குகிறது.

தேவன் என் மீது கொண்டுள்ள அன்பையும், கிருபையையும் பற்றி உனக்குச் சொல்கிறேன். என் கணவர் கர்த்தருடன் இருக்க சென்ற நாள் முதல் இன்று வரை, என்

பரலோக பிதா என் இருதயத்தை நிரப்பி, அவரது மேம்பட்ட சமாதானத்தால் என்னைச் சூழ்ந்திருக்கிறார். நான் கண்ணீர் விட்டாலும், இந்த சமாதானத்தால் இரவில் நன்றாகத் தூங்க அனுமதிக்கிறது, என் இதயத்தில் பயம் இல்லை. தேவன் என் மீது காட்டும் அக்கறையையும், இரக்கத்தையும் நான் நன்கு அறிவேன்.

என் கணவர் தனது அழைப்புக்கு உண்மையுள்ளவராக இருந்ததற்காகவும், நம்மை விட்டு கடந்து சென்றவர்களை சந்திக்க அவர் தரிசனத்தை வைத்திருந்ததற்காகவும், பூமியில் தனது வாழ்க்கையின் கடைசி தருணங்கள் வரை கர்த்தருக்காக பணியாற்றிய சேவைக்காகவும் நான் தேவனுக்கு நன்றியுள்ளவளாக இருக்கிறேன். நாம் இப்போது அவரைப் பார்க்க முடிந்தால், நமது இரட்சகரை அவர் முகமுகமாக சந்தித்தபோது அவரது பல வருட உழைப்பு, முடிவற்ற பயணம், போராட்டங்கள் மற்றும் சோதனைகள் அனைத்திற்கும் மதிப்புள்ளவை என்று அவர் நம்மிடம் கூறுவார் என்று நான் நம்புகிறேன்.

மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்திருக்கின்றதை [எபிரெயர் 12:1 ] பெரிய மேகத்தைப் பற்றி மெட்ரோபொலிட்டன் அடிக்கடி தியானிப்பார். அவர் இந்த மேகத்தில் சேர்ந்துகொண்டார் என்று நான் கற்பனை செய்கிறேன், அவருடைய முன்மாதிரியை நாம் தொடர்ந்து பின்பற்றி,

ஒரே திருச் சபையாக அவர் நமக்காக விட்டுச்சென்ற தரிசனத்தையும், வழிநடத்துதலையும் நிறைவேற்றுவதை அவர் ஆவலுடன் கவனித்துக் கொண்டிருப்பதையும் நான் நினைவுகூறவேண்டும்.

அன்பு சகோதரியே, நாம் நித்தியமாக வாழ தீர்மானித்து, இதுவரை சுவிஷேசம் கேள்விப்படாத மக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல நமது வாழ்க்கையை அர்ப்பணித்தால், நமது கர்த்தராகிய இயேசுவுக்கும், நமது ஆவிக்குரிய பிதாவுக்கும் மிகுந்த கனத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டு வருவோம். நமது திருச்சபையை இப்போது முன்னின்று வழிநடத்துவதில் நம் மெட்றொபொலிடன் தியோப்பிலஸ் அவர்களுக்காகவும், தேவன் தம்முடைய ஞானத்தில் அவரை வழிநடத்தவும் நமது அனைத்து பேராயர்கள் மற்றும் திருச்சபையின் தலைவர்களுக்காகவும் உண்மையுடன் ஜெபிப்போம்.

சகோதரிகளாக, நாம் அவர்களுக்கும், நமது சபைக்கும் ஆசீர்வாதமாகவும் ஊக்கமாகவும் இருக்க முயற்ச்சிக்க வேண்டும் உறுதியுடன் வாழ்வோம்.

என் அன்பு சகோதரிகளே, இந்த கடிதத்தில் எனது கடைசி இரண்டு மாத பயணத்தை உங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன்.

உயிர்த்தெழுதலின் வாக்குறுதி ஒரு நாள் நம் துக்கத்தை மகிழ்ச்சியாக மாற்றும். மெட்ரோபாலிட்டன் மற்றும் நமக்கு முன் சென்ற அனைவருடனும் நாம் ஒன்றாக இருப்போம். அது என்றென்றும் நமது இரட்சகரின் முன்னிலையில் இருக்கும்.

கிறிஸ்து இயேசுவிற்குள் நான் உங்களை நேசிக்கிறேன் என்பதை அறிந்து கொள்ளுங்கள், நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரி,
கிஸெல்லா யோகன்னன்.